# amfori BSCI
# பங்கேற்பாளர்களுக்கான அமல்படுத்துதல் விதிமுறைகள்[1]

## I. அறிமுகம்

இந்த ஆவணத்தின் நோக்கத்திற்காக, **“amfori BSCI பங்கேற்பாளர்கள்”** என்பது, வெளிநாட்டு வர்த்தகச் சங்கத்தின் (amfori) உறுப்பினர்களான மற்றும் amfori BSCI (amfori BSCI)-யை ஒப்புக்கொள்ளும் சில்லறை வர்த்தகர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் போன்ற வர்த்தக நிறுவனங்களைக் குறிக்கிறது.

இந்த அமல்படுத்துதல் விதிமுறைகளைக் கையொப்பமிடுவதன் மூலம், amfori BSCI பங்கேற்பாளர்கள், **amfori BSCI நடத்தை விதி**யின் மதிப்புகளையும் கொள்கைகளையும் ஒப்புக்கொள்வதோடு, தங்கள் செல்வாக்கு வட்டத்-திற்குள், தங்களின் வழங்கல் சங்கிலியில் அவற்றை அமல்படுத்துவதற்கான நியாயமான தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொறுப்பேற்கின்றனர்.

அவ்வாறு செய்வதன் மூலம், amfori BSCI பங்கேற்பாளர்கள், **amfori BSCI -இன் அர்ப்பணிப்பு சூத்திரத்திற்கு** உட்படுத்தப்படுகிறார்கள்.

கீழ்வரும் சொற்கள், தங்கள் வழங்கல் சங்கிலியில் பணி நிலைமைகளை மேம்படுத்துவதற்கான amfori BSCI பங்கேற்பாளர்களின் அர்ப்பணிப்பை உருவகப்படுத்துகின்றன.

[1] பதிப்புரிமை 2017 மூலம் amfori

# II. சமூகப் பொறுப்புணர்வுள்ள வணிகத்திற்கு அர்ப்பணிப்பு

2.1. amfori BSCI நடத்தை விதிகளில் உள்ள அர்ப்பணிப்புகளை நிறைவேற்றுவதில், amfori BSCI பங்கேற்பாளர்கள் மற்ற amfori BSCI பங்கேற்பாளர்களுடன் **இணைந்து கூட்டாகச்** செயல்படுகின்றனர், மற்றும் பங்குதாரர்களுடன் **குறிப்பாக அவசரகாலத் தொடர்புத் தேவைகளுக்காக ஒரு ஆக்கபூர்வமான மற்றும் வெளிப்படையான உரையாடலைத் தொடர்கின்றனர்.**

2.2. amfori BSCI பங்கேற்பாளர்கள், தங்களுடைய amfori BSCI நடத்தை விதி ஒப்புதலைத் தங்கள் தொழில் பங்குதாரர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கும் தங்கள் நிறுவன அமைப்பு வழியே **செயலூக்கமாகத் தெரிவிக்கின்றனர்.**

2.3. amfori BSCI பங்கேற்பாளர்கள், தங்களது தொழில் பங்குதாரர்கள், **நடத்தை விதி மற்றும் குறிப்பிட்ட அமல்படுத்துதல் விதிமுறைகளை முழுமையாகக் கடைபிடிப்பதற்கான வேலையைச் செய்யுமாறு** கேட்டுக்கொள்கின்றனர். amfori BSCI நடத்தை விதி, அமல்படுத்துதல் வழிமுறைகள் மற்றும் amfori BSCI சொற்களஞ்சியம் ஆகியவற்றை அவர்கள் தங்கள் தொழில் பங்குதாரர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் அந்தத் தகவல்களை இலக்கிடப்பட்ட வழங்கல் சங்கிலியில் உள்ள பல்வேறு அடுக்குகளில் சம்பந்தப்பட்ட தொழில் பங்குதாரர்களுக்கும் பரப்ப வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

2.4. amfori BSCI பங்கேற்பாளர்கள், தங்களின் **யுக்தி, நடைமுறைகள் மற்றும் போதுமான ஆதாரங்களைக் கொண்டு, amfori BSCI** நடத்தை விதி தொடர்பான பொறுப்புக்களை எதிர்கொள்கின்றனர், மற்றும் **அதனை அமல்படுத்துவதில் தொடர்ச்சியான முன்னேற்றம் இருப்பதை உறுதி செய்கின்றனர்.**

2.5. amfori BSCI பங்கேற்பாளர்கள், amfori BSCI நடத்தை விதியைக் கடைபிடிப்பதற்காகத் தங்கள் **தொழில் பங்குதாரர்கள்** எடுக்கும் முயற்சிகளைப் **பின்தொடரும் பொறுப்பைக் கொண்டிருக்கும்போது,** amfori BSCI -இன் மதிப்புகள் மற்றும் நடைமுறைகளைத் தாங்களும் பின்பற்றுவதை உறுதி செய்கிறார்கள்.

2.6. amfori BSCI பங்கேற்பாளர்கள் **நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளைப் புறக்கணிப்பது** மற்றும்/அல்லது அமல்படுத்துதல் விதிமுறைகளை மீறுவது ஆகியவை, amfori BSCI பங்கேற்பாளராக தாங்கள் நிறுத்தப்படுவதற்கு போதுமானவை என்பதை ஒப்புக்கொள்கின்றனர். இந்த விஷயத்தில், நிரூபிக்கும் பொறுப்பு, amfori/amfori BSCI -க்கு உள்ளது.

## III. வணிக நிறுவனக் கலாச்சாரத்திற்குள் சமூகப் பொறுப்புணர்வினை உட்பொதித்தல்

3.1. amfori BSCI பங்கேற்பாளர்கள், தங்களுடைய கொள்முதல் பழக்கம் (எ.கா. விலை மற்றும்/அல்லது விநியோக நேரம் போன்ற) மூலம், தங்கள் தொழில் பங்குதாரர்கள் amfori BSCI நடத்தை விதியைக் கடைப்பிடிப்பதிலிருந்து விலகும் நிலைக்கு, அவர்களைக் கொண்டுவரக் கூடாது.

3.2. கொள்முதல் மற்றும் பிற சம்பந்தப்பட்டத் துறைகள் (அல்லது தனிநபர்கள்), amfori BSCI பங்கேற்பாளர்களின் நிறுவனக் கலாச்சாரங்களில் உள்ள பொறுப்பான வணிகத்தின் கொள்கைகளை ஒருங்கிணைப்பதில் பங்களிக்கும் வகையில் அவர்களுக்குப் பயிற்சியும் ஊக்கமும் கொடுக்கப்பட வேண்டும்.

3.3 amfori BSCI பங்கேற்பாளர்கள், தங்களுடைய உறுப்பினர் சேர்க்கைக்குப் பிறகு 6 மாதங்களுக்குள் **amfori BSCI -இன் அனைத்து கட்டாயப் பயிற்சிகளையும்** நிறைவு செய்ய வேண்டும்.

3.4. amfori BSCI பங்கேற்பாளர்கள், amfori BSCI அமல்படுத்துதலில் **செயலூக்கமாக ஈடுபட்டும் நிகழ்நிலை அறிந்தும்** இருக்கின்றனர்.

## IV. வழங்கல் சங்கிலியில் ஒத்துழைப்பு மற்றும் அதிகாரமளித்தல்

4.1. amfori BSCI பங்கேற்பாளர்கள், **பயிற்சிகளில் ஈடுபட்டு, தங்கள்** சொந்த ஊழியர்களையும் தொழில் பங்குதாரர்களையும் amfori BSCI நடத்தை விதியில் அமைக்கப்பட்டுள்ள கொள்கைகளை நிறைவேற்றுவதற்குத் **தேவையானத் திறன்களை வளர்ப்பதற்காக** ஆதரிக்கின்றனர்.

4.2. amfori BSCI பங்கேற்பாளர்கள், **தங்கள் தொழில் பங்குதாரர்கள் amfori BSCI நடத்தை விதியைக் கடைபிடிப்பது மீதான திறன் பற்றியும், இந்த எதிர்பார்ப்புகளை எதிர்கொள்வதில் உதவியாக அவர்களுக்குத் துணை நிற்கவும், தங்களது தொழில் பங்குதாரர்களுடன் ஒரு ஆக்கபூர்வமான மற்றும் வெளிப்படையான உரையாடலை நாடுகின்றனர்.**

**4.3.** amfori BSCI பங்கேற்பாளர்கள், **நிர்வாகம், தொழிலாளர்கள், மற்றும்/அல்லது அவர்களதுப் பிரதிநிதிகளுக்கு இடையே,** amfori BSCI நடத்தை விதியை வெற்றிகரமாக அமல்படுத்த வழிவகுக்கும் அமைப்புகள் மற்றும் நடைமுறைகளின் மேம்பாடு மற்றும் அமல்படுத்துதலில் **செயலூக்கமான ஒத்துழைப்பை ஊக்குவிக்கின்றனர்.**

**4.4.** amfori BSCI பங்கேற்பாளர்கள், amfori BSCI நடத்தை விதியுடன் முரண்படும் அவர்களது நடத்தையின் **மூல காரணங்களை அடையாளம் காணவும்**, முன்னேற்றத்தை நோக்கிய ஒரு படிப் படியான அணுகுமுறையில் பணியாற்றவும், தங்கள் தொழில் பங்குதாரர்களுடன் (குறிப்பாகக் கண்காணிப்பு செயல்முறையில் ஈடுபடுத்தப்படும் உற்பத்தியாளர்கள்) ஒத்துழைத்து செயலாற்றுகிறார்கள்.

## V. வழங்கல் சங்கிலியில் தகுந்த விழிப்புணர்வு

**5.1.** amfori BSCI பங்கேற்பாளர்கள், பின்வருவனவற்றில் **தகுந்த விழிப்புணர்வுடன் செயல்படப் பொறுப்பேற்கின்றனர்**: (a) amfori BSCI நடத்தை விதிக்கு எதிரான உண்மையான மற்றும் சாத்தியமான எதிர்மறைத் தாக்கங்களைக் கணக்கீடு செய்தல்; (b) இந்த எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தும் மிக முக்கியமான இடர்கள் **வழங்கல் சங்கிலியில்** எந்த இடத்தில் நிகழ்கின்றன என்பதைக் கண்டறிதல் மற்றும் (c) அவற்றைத் தடுக்கும் மற்றும்/அல்லது amfori BSCI நடத்தை விதியுடன் அவர்கள் இணங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படுதல்.

**5.2.** amfori BSCI பங்கேற்பாளர்கள், தங்கள் தொழில் பங்குதாரர்களின் பொறுப்பான நடத்தையைப் பற்றி நம்பகமானத் தகவலைச் **சேகரித்து மதிப்பிடுகின்றனர்**, மற்றும் அவர்கள் தகுந்த விழிப்புணர்வுடன் செயல்பட்டதற்குத் தேவையான ஆவண ஆதாரங்களை வைத்திருக்கிறார்கள்.

**5.3.** amfori BSCI பங்கேற்பாளர்கள், பணி நிலைமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்களை ஊக்குவிப்பதற்காக, **amfori BSCI கண்காணிப்பு செயல்முறையில் சேர்த்துக்கொள்ளக்கூடிய தொழில் பங்குதாரர்களை அடையாளம் காணுகின்றனர்**. amfori BSCI நடத்தை விதியின் கொள்கைகளுடன் ஏதாவது முரண்பாடு மற்றும் செயலற்ற தன்மை மீதான மூல காரணங்கள் மீது **கூடுதல் விவரங்களைத் தேடுகின்றனர்**. மற்றும், தேவையானத் திருத்த நடவடிக்கைகளை **அமல்படுத்துவதில்**, குறிப்பாக அதிக அபாயமுள்ள பகுதிகள் அல்லது துறைகளிலிருந்து வாங்கும்போது, அவர்கள் மேலும் அதிக விவரங்களைக் கோருகின்றனர்.

5.4. amfori BSCI பங்கேற்பாளர்கள், **தங்கள் தொழில் பங்குதாரர்கள் (குறிப்பாக amfori BSCI கண்காணிப்புச் செயல்முறையில் உள்ளவர்கள்)** amfori BSCI நடத்தை விதியை அமல்படுத்துவதில் மற்றும்/அல்லது நிலைநிறுத்துதலில் தங்களது முன்னேற்றம், மற்றும் தாங்கள் ஈடுபட்டுள்ள amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளுக்கெதிரான எதிர்மறைத் தாக்கத்திற்கான தங்களின் பதில்களுக்குக் கிடைக்கும் பலன்கள் பற்றி **முறையாக அறிக்கை அளிக்க** வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறார்கள்.

5.5. amfori BSCI பங்கேற்பாளர்கள், வழங்கல் சங்கிலியினால் எதிர்மறைத் தாக்கமடைந்த தனி நபர்கள் மற்றும் சமூகங்களுக்குப் பதில் அளிக்க, தங்களால் இயன்ற அளவு அதிகமாக, ஒரு திறம்பட்ட **இயக்கநிலை குறைதீர்ப்பு வழிமுறையில்** ஈடுபட, அல்லது ஆதரவளிக்க வேண்டும்.

## VI. தகவல் மேலாண்மை

6.1. amfori BSCI பங்கேற்பாளர்கள், amfori BSCI மற்றும் பிற பங்கேற்பாளர்களுக்குத் தொடர்புடைய, amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளுக்கு **எதிரான தாக்கத்திற்கான பயனுள்ள பதில்கள் ஏதாவது கிடைக்கும்போது, அதை amfori BSCI செயலகத்திற்கு சுறுசுறுப்பாகத் தெரிவிக்க வேண்டும்.**

6.2. amfori BSCI பங்கேற்பாளர்கள், **சாத்தியமான பாதிப்படைந்த பங்குதாரர்களின் கவலைகளைப் புரிந்து கொண்டு** அவற்றிற்கான அறிவுரையும் ஆலோசனையும் பெற, அவர்கள் வெளியே நம்பிக்கையான, தனித்துச் செயல்படும் வல்லுநர்களை நாடுகிறார்கள். அரசாங்கங்கள், சிவில் சமூகம் மற்றும் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் இதில் அடங்குவர்.

6.3. amfori BSCI பங்கேற்பாளர்கள், **தங்கள் தொழில் பங்குதாரர்களின்**, amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகள் மீது **எதிர்மறையானத் தாக்கங்களை உண்டாக்கக்கூடிய, எந்தவொரு முக்கியமான சம்பவத்தையும், தங்களுக்கு அது தெரியவந்த மறுகணமே, உடனடியாக amfori BSCI -க்குத் தெரிவிக்க பொறுப்பேற்கின்றனர்.**

6.4. amfori BSCI பங்கேற்பாளர்கள் **நிகழ்நிலைப்படுத்தப்பட்ட மற்றும் துல்லியமான தகவல்களை amfori BSCI மேடையில் பராமரிக்க வேண்டும். தவிர, தனியுரிமை மற்றும் தகவல் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணக்கமாக,**

**இத்தகையத் தகவல்களைப் பயன்படுத்த வேண்டுமெனத் தங்கள் ஊழியர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.**

6.5. amfori BSCI பங்கேற்பாளர்கள் **தங்கள் தொழில் பங்குதாரர்கள் (குறிப்பாக amfori BSCI -இல் கண்காணிக்கப்படுபவர்கள்),** amfori BSCI ஒருங்கிணைந்த திட்டத்தின் சட்டத்தில் உள்ள சாட்சியம் தணிக்கை, நகல் தணிக்கைகள், மற்றும் சீரற்ற முன்னறிவிப்பின்றி சோதனையிடுதல் (RUC) போன்ற, ஆனால் அது மட்டுமல்ல, விசாரணை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படக்கூடும் என்பதற்கு சம்மதிக்கிறார்கள்.

______________________________

*நிறுவனத்தின் சார்பாக கையொப்பம்*

______________________________

*கையொப்பத்தின் தேதி*

______________________________

*நிறுவனத்தின் பெயர்*

______________________________

*நபரின் பெயர்*